# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

## CC.No.39/2025

## வழக்கு சாட்சி PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **பாண்டியராஜன்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : கருப்பையா | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : கானல்காடு | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 54/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 08.06.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கானல்காட்டில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் எனது ஊரைச் சேர்ந்தவர். தேதி நினைவில்லை. சுமார் 1 வருடத்திற்கு முன்பு காலை 11.00 மணியளவில் கருவறையில் உள்ள எனது காப்பி மிளகு தோட்டத்தில் நானும் , எனது பக்கத்து ஊரைச் சேர்ந்த முருகன் என்பவரும் எனது தோட்டத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தபொழுது அங்கு வந்த ஆஜர் எதிரி அரிவாளை திருப்பி பிடித்துக்கொண்டு எனது நெற்றியின் வலது புறத்தில் அடித்துவிட்டார் . எதிரி என்னைப்பார்த்து கோத்தா , கொம்மா என்று ஆபாசமாக திட்டினார். எதிரி அவரது தோட்டத்தை மிளகு எடுப்பதற்காக முருகனுக்கு கொடுத்துவிட்டார். எதிரி என் தோட்டத்து மிளகை எடுத்ததால்தான் சண்டை நடந்தது. எனக்கு எதிரி தாக்கியதன் காரணமாக தலையில் அடிபட்டது. என் தோட்டத்தில் வேலைக்கு வந்திருந்த செல்வம் என்பவர் என்னை அழைத்துக்கொண்டு தாண்டிக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். அரசு மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன் . நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அங்கு வந்த தாண்டிக்குடி போலீசாரிடம் புகார் மனு

கொடுத்தேன். அந்த புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

Counsel Mr.C. Selvaraj representing the accused present. The counsel stated there is no cross behalf of the defenced. Hence cross of the present witness is closed.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.06.08 14:28:14 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No.39/2025**

**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **செல்வம்** | தொழில் | : கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : ராஜா கிளி | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : கானல்காடு | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 53/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 08.06.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கானல்காட்டில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும் . அ.சா.1, எதிரியும் உறவு முறையில் அண்ணன் ஆவார்கள் . தேதி நினைவில்லை. சுமார் 1 வருடத்திற்கு முன்பு காலை 09.00 மணியளவில் கருவறை காட்டிற்கு நான் வேலைக்கு சென்றபோது வேலைக்கு சென்று சத்துபிரியன் என்பவரது காட்டில் வேலை செய்து கொண்டிருந்த போது பாண்டியராஜனுக்கு வலது நெற்றியில் காயமுற்று நின்று கொண்டிருந்தார் . என்னிடம் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லுமாறு உதவி கோரியதன் அடிப்படையில் தாண்டிக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றேன் . விசாரித்ததில் ரவி அடித்துவிட்டதாக என்னிடம் தெரிவித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

பாண்டியராஜன் சொன்ன விபரங்களின் அடிப்படையில் தான் மேற்சொன்ன சங்கதிகளை சாட்சியமாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.06.08 14:28:23 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No.39/2025**

**வழக்கு சாட்சி PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **முருகன்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : தொத்தன் | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : மங்களங்கொம்பு | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 59/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 08.06.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் மங்களங்கொம்பில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன் . அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களைத் தெரியும். தேதி நினைவில்லை. சுமார் 1 வருடத்திற்கு முன்பு கானல்காட்டில் உள்ள ரவி தோட்டத்தில் நானும், ரவி மற்றும் வெளியூரைச் சேர்ந்த சில நபர்களும் தோட்டத்தில் இருந்தபோது பாண்டியராஜனுக்கும், ரவிக்கும் இடையே மரம் சம்பந்தமாக வாய்த்தகராறு ஏற்பட்டது . அப்போது பாண்டியராஜன் கீழே விழுந்ததில் அவருக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது என்ற விபரம் மட்டும் தெரியும் . வேறு விபரங்கள் தெரியாது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

Counsel Mr.C. Selvaraj representing the accused present. The counsel stated there is no cross behalf of the defenced. Hence cross of the present witness is closed.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.06.08 14:28:30 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.